# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol : 01 | Issue : 235 | 4 Pages | 28.3.2024 | Thusday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 235 | 4 பக்கங்கள் | 28.3.2024 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |



# கன்னியாகுமரி தொகுதி, விளவங்கோடு தொகுதி வேட்பாளர்களை ஆதரித்து எடப்பாடி பழனிசாமி பிரசாரம்

நாகர்கோவில், மார்ச். 28

தமிழகத்தில் அ.தி.மு.க. மற்றும் அதன் கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி பிரசாரம் மேற்கொண்டு வருகிறார்.

கன்னியாகுமரி பாராளுமன்ற தொகுதி அ.தி.மு.க. வேட்பாளர் பசலியான் நசரேத், விளவங்கோடு சட்டமன்ற தொகுதி அ.தி.மு.க. வேட்பாளர் ராணி ஆகியோரை ஆதரித்து இன்று (27ந்தேதி) பிரசாரம் செய்கிறார். இதற்காக அவர் நேற்றிரவு கன்னியாகுமரி வந்தார். அவரை கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட செயலாளர் தளவாய் சுந்தரம் எம்.எல்.ஏ. வரவேற்றார்.

கன்னியாகுமரியில் உள்ள விடுதியில் எடப்பாடி பழனிசாமி தங்கி உள்ளார். இன்று மாலை 4 மணிக்கு நாகர்கோவில் நாகராஜா கோவில் திடலில் நடைபெறும் கூட்டத்தில் வேட்பாளர்கள் பசலியான் நசரேத்,



ராணியை ஆதரித்து பிரசாரம் செய்கிறார். இந்த நிகழ்ச்சியில் தளவாய் சுந்தரம் எம்.எல்.ஏ. மற்றும் கூட்டணி கட்சிகளான தே.மு.தி.க., புதிய தமிழகம், எஸ்.டி.பி.ஐ., பார்வர்ட் பிளாக், புரட்சி பாரதம் உட்பட கூட்டணி கட்சித் தலைவர்கள் கலந்து கொள்கிறார்கள்.

எடப்பாடி பழனிசாமி பிரசாரத்திற்கு வருகை தந்துள்ளதையடுத்து அ.தி.மு.க.வினர் உற்சாகம் அடைந்துள்ளனர். இன்று மாலை நடைபெறும் பிரசார கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக நாகர்கோவில் நாகராஜா கோவில் திடலில் மதியமே தொண்டர்கள்வர தொடங்கினார்கள். மாவட்டத்தின்பல்வேறு பகுதியில் இருந்தும் ஏராளமான தொண்டர்கள் நாகராஜா திடலுக்கு வந்தனர். இதையடுத்து அவர்கள் வாகனங்களை நிறுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. அ.தி.மு.க. தொண்டர்களின்வருகையால் நாகர்கோவில் நகரில் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டது.

எடப்பாடி பழனிசாமி நாகர்கோவிலில் பிரசாரத்தை முடித்துவிட்டு இரவு சங்கரன்கோவில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகிறார்.

## சத்தீஸ்கர்: மது அருந்திவிட்டு பள்ளிக்கு வந்த ஆசிரியர் விரட்டி அடித்த மாணவர்கள்



சத்தீஸ்கர், மார்ச். 28

சத்தீஸ்கர்மாநிலம் பஸ்தர்மாவட்டத்தில் உள்ள பாலிபட்டா தொடக்கப் பள்ளியின் ஆசிரியர் ஒருவர் தினமும் மது அருந்திவிட்டு பள்ளிக்கு வந்துள்ளார். அவர் குழந்தைகளுக்கு பாடம் நடத்தாமல் தரையில் படுத்துத் தூங்கியுள்ளார். குழந்தைகள் பாடம் சம்பந்தமாக ஏதாவது சந்தேகம் கேட்டால், அவர்களை அந்த ஆசிரியர் திட்டி தீர்த்துள்ளார்.

இந்நிலையில் அண்மையில் அந்த ஆசிரியர் வழக்கம்போல் குழந்தைகளை தகாத வார்த்தைகளால் பேசியதால் கோபமடைந்த குழந்தைகள் தங்கள் செருப்புகளை எடுத்து ஆசிரியர் மீது வீசத் தொடங்கினர். அடுத்தடுத்து செருப்புகள் பறந்து வந்ததால், அந்த ஆசிரியர் தனது பைக்கை எடுத்துக் கொண்டு தப்பி ஓடத்தொடங்கினார். குழந்தைகளும் அவரைப் பின் தொடர்ந்து செருப்புகளை வீசி விரட்டியடித்தனர்.

இதனை அங்கிருந்த ஒருவர் வீடியோ எடுத்து சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ளார். தற்போது அந்த வீடியோ வைரலாகியுள்ளது.

## இமாச்சலில் தகுதிநீக்கம் செய்யப்பட்ட 6 காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்களுக்கும் சீட்



இமாச்சலப் பிரதேசம், மார்ச். 27

இமாச்சலப் பிரதேசத்தில் தகுதி நீக்கம் செய்யப்பட்ட காங்கிரஸ் எம்எல்ஏக்கள் 6 பேருக்கும் வரும் இடைத்தேர்தலில் போட்டியிட பாஜக வாய்ப்பு வழங்கியுள்ளது.

அண்மையில் இமாச்சல பிரதேசத்தில் மாநிலங்களவை தேர்தல் நடைபெற்றது. அந்த தேர்தலில், காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள் 6 பேர் கட்சி மாறி வாக்களித்ததால் குறைந்த எம்எல்ஏக்களை (25) கொண்ட பாஜக வேட்பாளர் வெற்றி பெற்றார்.

இதனால், பாஜகவுக்கு வாக்களித்த காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள் ஆறு பேர் தகுதி நீக்கம் செய்யப்படுகிறார்கள் என சபாநாயகர் அதிரடி உத்தரவை பிறப்பித்தார்.

சுதிர் ஷர்மா, இந்தர் தத் லக்ஷன்பால், ரவி தாக்கூர், சேதன்யா ஷர்மா ராஜிந்தர் ராணா, தேவிந்தர் குமார் புட்டோ ஆகிய தகுதி நீக்கம் செய்யப்பட்ட எம்எல்ஏக்கள் 6 பேர் சில நாட்களுக்கு முன்பு பாஜகவில் இணைந்தனர். டெல்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மத்திய அமைச்சர் அனுராக் தாக்குர், இமாச்சலப் பிரதேச முன்னாள் முதல்வரும் தற்போதைய சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான ஜெய்ராம் தாக்கூர் ஆகியோர் முன்னிலையில் 6 பேரும் பாஜகவில் தங்களை இணைத்துக்கொண்டனர்.

இமாச்சல பிரதேசத்தில் நாடாளுமன்றத் தேர்தலோடு சேர்த்து ஜூன் 1ம் தேதி இடைத் தேர்தல் நடைபெற உள்ளது. இதனிடையே, பாஜகவை ஆதரிப்பதாக கூறி, சுயேட்சை எம்எல்ஏக்கள் ஹோஷியார் சிங், ஆஷிஷ் ஷர்மா, கே.எல். தாக்கூர் ஆகிய மூவரும் ஷிம்லாவில் சட்டப்பேரவை செயலாளர் யஷ்பால் ஷர்மாவை சந்தித்து, ராஜினாமா கடிதத்தைக் கொடுத்தனர். இதனால் 9 சட்டப்பேரவை உறுப்பினர்களின் இடங்கள் காலியாக உள்ளது. இதனால் சட்டப்பேரவையின் பலம் தற்போது 68ல் இருந்து 59 ஆக குறைந்துள்ளது. இதில், ஆளும் காங்கிரஸ் கட்சி சபாநாயகர் உள்பட 34 எம்எல்ஏக்களைக் கொண்டுள்ளது. பாஜக, 25 எம்எல்ஏக்களைக் கொண்டுள்ளது. எனவே, ஆட்சியைத் தக்கவைத்துக்கொள்ள இந்த இடைத்தேர்தலில் காங்கிரஸ் கட்சி குறைந்தபட்சம் ஒரு தொகுதியிலாவது வெற்றி பெற வேண்டிய கட்டாயத்தில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

## ஐ.பி.எல். சூதாட்டத்தால் ரூ. 1.5 கோடி இழந்த அரசு ஊழியர்.. விபரீத முடிவெடுத்த மனைவி

கர்நாடக, மார்ச். 27

கர்நாடக அரசு ஊழியர் தர்ஷன் பாபு. நீர்வளத்துறையில் துணை பொறியாளராக பணியாற்றி வருகிறார். பெங்களூருவை அடுத்த சித்ரதுர்கா என்ற பகுதியில் வசித்து வந்த தர்ஷனுக்கு கடந்த 2020 ஆம் ஆண்டு ரஞ்சிதா என்பவருடன் திருமணம் நடைபெற்றது. தர்ஷன் ரஞ்சிதா தம்பதிக்கு இரண்டு வயதில் ஆண் குழந்தை உண்டு. திருமணம் ஆன ஒருவருடத்தில் இருந்து தர்ஷன் பாபு ஐ.பி.எல். சூதாட்டத்தில் ஈடுபட்டு வந்துள்ளார். மிக விரைவில் பணக்காரர் ஆகிவிடலாம் என்ற ஆசையில் தர்ஷன் பாபு சூதாட்டத்தில் ஈடுபட்டார். தொடர்ச்சியாக சூதாடியதில் தர்ஷன் அதிக பணத்தை இழந்துள்ளார். சூதாட்டத்தில் பணத்தை இழக்கும் போது, மீண்டும் கடன் பெற்று சூதாடுவதை தர்ஷன் வழக்கமாக கொண்டுள்ளார் என கூறப்படுகிறது. அந்த வகையில், இவர் ரூ. 1 கோடியே 50 லட்சத்திற்கும் அதிகமான தொகையை கடனாக பெற்று இருக்கிறார். கடனாக பெற்ற தொகையை சூதாட்டத்தில் இழந்த தர்ஷன், இழந்த தொகையில் ரூ. 1 கோடியை திரும்ப கொடுத்துள்ளார். எனினும், கடனில் ரூ. 84 லட்சத்தை திரும்ப கொடுக்காமல் இருந்துள்ளார். கணவர் தர்ஷன் பெற்ற கடன் தொகையை திரும்ப கேட்டு, மனைவி ரஞ்சிதாவிடம் கடன்தாரர்கள் தொல்லை கொடுத்து வந்ததாக தெரிகிறது. கடன்தாரர்கள் தொல்லையால் மன உளைச்சல் அடைந்த மனைவி ரஞ்சிதா தனது வீட்டில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார். தற்கொலைக்கான காரணத்தை ரஞ்சிதா கடிதம் ஒன்றில் எழுதி வைத்திருக்கிறார். அதில் கடன்தாரர்கள் என்ன தொல்லை கொடுத்தனர் என்று விவரித்துள்ளதாக கூறப்படுகிறது. இந்த கடிதத்தை கைப்பற்றிய காவல் துறையினர் விசாரணையை துவங்கியுள்ளனர். கணவனின் சூதாட்ட பழக்கம், கழுத்தை நெறித்த கடன், கடன் கொடுத்தவர்களின் தொல்லையால் மனைவி தனது உயிரை மாய்த்துக் கொண்ட சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

## கலெக்டர் அலுவலக வளாகத்தில் 4 நாட்களாக நின்ற "மர்ம" காரால் பரபரப்பு

மதுரை, மார்ச். 28

தமிழகத்தில் பாராளுமன்ற தேர்தல் வாக்குப்பதிவு ஏப்ரல் மாதம் 19 ந்தேதி ஒரே கட்டமாக நடக்கிறது. இதையடுத்து தேர்தல் நடத்தை விதிகள் அமலில் உள்ள நிலையில் பறக்கும் படையினர் மற்றும் நிலையான கண்காணிப்பு குழுவினர் வாகன சோதனையை தீவிரப்படுத்தி உள்ளனர்.

வாக்காளர்களுக்கு பணப்பட்டுவாடாவை தடுக்கும் வகையில் இந்த சோதனை மேற்கொள்ளப்படுவதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. தேசிய நெடுஞ்சாலை தொடங்கி நகர சாலைகள் வரை சந்தேகத்திற்கு இடமான முறையில் பயணிக்கும் வாகனங்களை தேர்தல் பறக்கும் படையினர் நிறுத்தி இந்த அதிரடி சோதனையை நடத்துகிறார்கள்.

இந்தநிலையில் மதுரை மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தின் சொகுசு கார் ஒன்று கடந்த 4 நாட்களாக நிறுத்தி வைக்கப்பட்டு இருந்தது. முதலில் இதனை யாரும் கண்டுகொள்ளவில்லை.

ஆனாலும் அந்த காரை எடுக்காத நிலையில் வாகனத்திற்கான பதிவு எண் உள்ளிட்டவைகள் இல்லாமல் இருப்பதால் சந்தேகம் வலுத்தது.

அதன் அடிப்படையில் முதற்கட்டமாக காவல்துறையினர் 4 நாட்களாக நின்று கொண்டிருந்த காரை தீவிர விசாரணை செய்தனர். மேலும் மெட்டல் டிடெக்டர்கள் மூலமாக சோதனை நடத்தப்பட்ட நிலையில் வெடிகுண்டு தடுப்பு நிபுணர்கள் மோப்பநாய் உதவியுடன் சோதனை செய்தனர்.

மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று மாலையுடன்




நிறைவு பெறும் நிலையில் 4 நாட்களாக மர்ம கார் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.



விழுப்புரம்.வடக்கு ஆரணி நாடாளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட செஞ்சி சட்டமன்ற தொகுதி.இந்தியாகூட்டணி செயல்வீரர்கள்கூட்டம் முன்னிட்டு மரியாதைநிமித்தமாக அமைச்சர் செஞ்சி மஸ்தான் தமிழக வாழ்வுரிமைக் கட்சி தொகுதி பொறுப்பாளர்கள் நா. ராசநாயகம் சிறு நாம் பூண்டி கோ.ராஜா.கோவிந்தன் அத்தியூர் அசோகன்.மயிலம் தொகுதி பொறுப்பாளர்கள் .ராமானுஜம்.தளவானூர் சக்திவேல் மேல்மலையனூர் தொகுதி பொறுப்பாளர் சுரேஷ் மாணிக்கம் வெங்கடேஷ் மாகராசன் ராமச்சந்திரன் விஜய் கேசவன்.ஏராளமான கழக நிர்வாகிகளுடன் மரியாதை நிமித்தமாக சந்தித்தனர்

## தொட்டில்பட்டியில் ராட்சத குடிநீர் குழாயில் உடைப்பு



மேட்டூர், மார்ச். 28

மேட்டூர் அருகே தொட்டில்பட்டி காவிரி ஆற்றில் நீரேற்று நிலையம் அமைத்து காடையாம்பட்டி பகுதிக்கு நாள் ஒன்றுக்கு 28 மில்லியன் லிட்டர் தண்ணீர் எடுக்கப்படுகிறது.

இதன் மூலம் ஓமலூர், காடையாம்பட்டி, தொப்பூர், தாரமங்கலம், மேச்சேரி பகுதிகளுக்கு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர் வினியோகம் செய்யப்படுகிறது. இந்நிலையில் அனல்மின் நிலையம் செல்லும் சாலையில் காடையாம்பட்டி ராட்சத குடிநீர் குழாயில் உடைப்பு ஏற்பட்டு கடந்த 2 நாட்களாக தண்ணீர் வீணாக வெளியேறி வருகிறது.

தற்போது கோடைகாலம் என்பதால் குடிநீர் பற்றாக்குறை நிலவி வரும் சூழ்நிலையில் குடிநீர் குழாயில் உடைப்பு ஏற்பட்டுள்ளது அப்பகுதி மக்கள் மத்தியில் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

எனவே குழாயில் ஏற்பட்டுள்ள உடைப்பை சரி செய்து தண்ணீர் வீணாக வெளியேறுவதை தடுத்து நிறுத்த வேண்டும் என குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகளுக்கு பொதுமக்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.



ராமநாதபுரம் மாவட்டத்தில் டாக்டர் சகாயம் ராஜ்குமார் அவர்களின் புதல்வன் சுஜன் ராஜ் அவர்களின் முதலாவது பிறந்தநாள் கொண்டாடப்பட்டது இதில் ஏராளமான தொழிலாளர்கள் மற்றும் திரு சத்தியமூர்த்தி அர்ஜுன் பாலாஜி வி கே பால்ராஜ் கரிகாலன் மற்றும் ஜெயசீலன் கலந்து கொண்டனர்

# சாலை நடுவில் மிளிரும் 'மெதுவாக செல்லுங்கள்' வாசகம் இரவு நேரங்களில் விபத்து தடுக்க நடவடிக்கை




வேலூர், மார்ச். 28

ராணிப்பேட்டை மாவட்டம் வாலாஜா முதல் திருப்பத்தூர் இடையே சென்னைபெங்களூரு நெடுஞ்சாலையில் இரவு நேரங்களில் அதிக அளவில் விபத்துகள் ஏற்படுகிறது.

இதை தடுக்கும் வகையில் அப்பகுதியில் ஆபத்தான விபத்துகளை குறிக்கும் கரும்புள்ளிகளில், சிறிய எல்.இ.டி. புரொஜெக்டர்கள் மூலம் தானாகவே இயங்கும் எச்சரிக்கை பலகைகளை நெடுஞ்சாலைத் துறையினர் அமைத்துள்ளனர்.

இதுகுறித்து தேசிய நெடுஞ்சாலை அதிகாரிகள் கூறியதாவது:

சென்னை பெங்களூரு சாலையில் தினமும் 1.2 லட்சம் வாகனங்கள் செல்கின்றன.

தற்போது, பகல் நேரத்தில் வாகன ஓட்டிகளுக்கு அறிவுறுத்தும் வகையில், எச்சரிக்கை பலகைகள் உள்ளன. இருப்பினும், இரவு நேரங்களில் அடிக்கடி விபத்துகள் நிகழும் போது, அதனை தடுப்பதற்கு ஏற்ற எச்சரிக்கை பலகைகள் இல்லை.

"முதன்முறையாக எடுக்கப்பட்டுள்ள இந்த முயற்சி, நெடுஞ்சாலைகளில் ஏற்படும் விபத்துகளை தடுக்க உதவும். இரவு நேரங்களில் நெடுஞ்சாலையில் வாகனம் ஓட்டும்போது தானியங்கி புரொஜெக்டர்கள் மூலம் சாலையின் நடுவில் கோ ஸ்லோ (மெதுவாக செல்லுங்கள்) என ஆங்கில எழுத்துக்கள் மிளிர்கின்றன.

எச்சரிக்கை பலகைகள் வாகன ஓட்டிகளை எச்சரிக்கின்றன" இரவு நேரங்களில், சில இடங்களில் மக்கள் கடப்பதை நாம் திடீரென்று கவனிக்கிறோம்.

அந்த இடங்களில் விபத்தை இதன் மூலம் தவிர்க்க முடியும்.

சிறிய தானாகவே இயங்கும் எல்.இ.டி புரொஜெக்டர்கள் சாலை நடுவில் உள்ள சென்டர் மீடியன் உள்ள மின் கம்பங்களில் பொருத்தப்பட்டுள்ளன.

இந்த எச்சரிக்கை பலகைகள்சாலையின்மையத்தில் 'மெதுவாக செல்லுங்கள்', 'குடித்துவிட்டு வாகனம் ஓட்டாதீர்கள்' மற்றும் 'போக்குவரத்து விதிகளுக்குக் கீழ்ப்படிதல்' போன்ற சாலை விதிகளை பிரதிபலிக்கும்.

வேலூரில் உள்ள இலங்கைத் தமிழர்களுக்கான மறுவாழ்வு முகாமுக்கு அருகிலும், கோணவட்டம் மற்றும் மேல்மொணவூர்,

பச்சை குப்பம், வெலக்கல்நத்தம் மற்றும் திருப்பத்தூரில் வளையாம்பட்டு பாலம், ராணிப்பேட்டை ஆகிய 3 மாவட்டங்களில் 13இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளால் விளக்குக் கம்பங்களுக்கு வழங்கப்படும் மின்சாரத்தில் தானியங்கி எச்சரிக்கை பலகைகள் இயங்கும்.

இந்த சாதனம் தெரு விளக்குகள் எரியும் நேரமான மாலை 6 மணிக்கு அதனுடன் சேர்ந்து இயங்கும். அதன்படி காலை தெரு விளக்குகள் அனைக்கும் நேரமான காலை 6 மணி வரை செயல்பாட்டில் இருக்கும்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.



2024 நாடாளுமன்ற தேர்தல் முன்னிட்டு, 13.விழுப்புரம் (தனி) நாடாளுமன்ற தொகுதி வாக்கு எண்ணும் மையமான விழுப்புரம் அறிஞர் அண்ணா அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் அடிப்படை வசதிகள் மற்றும் மேற்கொள்ளப்படவுள்ள முன்னேற்பாடு பணிகள் குறித்து மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் சி.பழனி, நேரில் பார்வையிட்டு, கள ஆய்வு செய்தார். உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர் தீபக் சிவாச் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) ஸ்ருதஞ்ஜெய் நாராயணன், விழுப்புரம் வருவாய் கோட்டாட்சியர் காஜா சாகுல் ஹமீது, பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் பரிதி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) தமிழரசன் உட்பட பலர் உள்ளனர்.

# ஆரணி நாடாளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட செஞ்சி சட்டமன்றத் தொகுதி இந்தியா கூட்டணி செயல்வீரர்கள் கூட்டம்



விழுப்புரம், மார்ச். 28

விழுப்புரம். வடக்கு மாவட்டம்.ஆரணி நாடாளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட செஞ்சி சட்டமன்றத் தொகுதி இந்தியா கூட்டணி செயல்வீரர்கள் கூட்டம் நடைபெற்றன.மார்ச் 28 விழுப்புரம் மாவட்டம் செஞ்சி அடுத்த செம்மேடு ஊராட்சியில் ஆரணி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட செஞ்சி சட்டமன்றத் தொகுதி இந்தியா கூட்டணி செயல்வீரர்கள் கூட்டம் நடைபெற்றன இக்கூட்டத்தின் தலைமையேற்று அமைச்சர் செஞ்சி மஸ்தான். விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் வெளிநாடு வாழும் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் மற்றும் எ.வ.வேலு அவர்கள் நெடுஞ்சாலைத்துறை மற்றும்.தெற்கு மாவட்ட செயலாளர். கூட்டணி வெற்றிபெற கூட்டணி கட்சி இன தமிழக வாழ்வுரிமைக் கட்சி தொகுதி பொறுப்பாளர் ராசநாயகம் செஞ்சி ஒன்றிய பொறுப்பாளர் ராஜா மேல் மலையனூர் ஒன்றிய பொறுப்பாளர் சுரேஷ் கோவிந்தன் மாணிக்கம் ஜெய்சங்கர் மற்றும் கூட்டணி கட்சியின் மாவட்ட செயலாளர் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகம் ஏ.கே மணி காங்கிரஸ் ரங்க பூபதி.ரமேஷ் சிபிஎம் ராமமூர்த்தி விசிக தனஜெயன் சி பி ஐ கலியமூர்த்தி மக்கள் நீதி மையம் ஸ்ரீபதி சையதுஸ்மான் மனித நேய மக்கள் கட்சிமறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாவட்ட செயலாளர்பாபு கோவிந்தராஜ் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் மஸ்தான்மற்றும் ஏராளமான கூட்டணி கட்சியின்மாவட்டம் மாநிலம் ஒன்றியம் நிர்வாகிகள்ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு வேட்பாளர் தரணி வேந்தன் அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்கு சேகரித்தனர்இதில்செஞ்சிமஸ்தான் அவர்கள் மூன்று லட்சம் வாக்கு வித்தியாசத்தில் உதயசூரியத்தில் நமது வெற்றி வேட்பாளர் தரணி வேந்தனை வெற்றி பெற செய்வேன் என உறுதி எடுத்துக் கொண்டனர்

# சிவகாசியில் விஜயகாந்த் மகனை ஆதரித்து எடப்பாடி பழனிசாமி இன்று பிரசாரம்



சிவகாசி, மார்ச். 28

பாராளுமன்ற தேர்தல் களம் சூடுபிடித்துள்ள நிலையில் தமிழ்நாட்டில் அ.தி.மு.க. தலைமையில் அமைந்துள்ள கூட்டணியில் தே.மு.தி.க., புதிய தமிழகம், எஸ்.டி.பி.ஐ., புரட்சி பாரதம் ஆகிய கட்சிகள் இணைந்துள்ளன. புதுச்சேரி உள்பட 40 தொகுதிகளிலும் போட்டியிடும் அ.தி.மு.க. மற்றும் கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து எடப்பாடி பழனிசாமி திருச்சியில் தனதுபிரசாரத்தைதொடங்கினார்.

அங்கு ஒரே மேடையில் 40 வேட்பாளர்களையும் அறிமுகப்படுத்தி பேசினார். இதில் தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா, புதிய தமிழகம் கட்சி நிறுவனர் மற்றும் கூட்டணி கட்சி தலைவர்கள் கலந்து கொண்டனர். இதையடுத்து நேற்று தூத்துக்குடியில் பிரசாரம் செய்த அவர் இன்று மாலை தென்காசி தொகுதிக்கு உட்பட்ட சங்கரன் கோவில் வருகிறார்.

அங்கு நடைபெறும் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு தென்காசி பாராளுமன்ற தொகுதி வேட்பாளரை ஆதரித்து வாக்கு சேகரித்து விட்டு அங்கிருந்து கார் மூலம் சிவகாசிக்கு வருகிறார். சிவகாசியில் உள்ள பிரபல ஓட்டலில் இரவு அவர் தங்குகிறார். நாளை காலை சிவகாசி பகுதியில் உள்ள தீப்பெட்டி, பட்டாசு, அச்சகம் உள்ளிட்ட தொழில்களை சார்ந்த அதிபர்களையும், அ.தி.மு.க., தே.மு.தி.க. கூட்டணி கட்சி நிர்வாகிகளையும் சந்தித்து பேசுகிறார்.

மாலை 5 மணிக்கு சிவகாசி பாவடி தோப்பில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு விருதுநகர் பாராளுமன்ற தொகுதி அ.தி.மு.க. கூட்டணியில் போட்டியிடும் தே.மு.தி.க. வேட்பாளரான விஜயகாந்த் மகனை ஆதரித்து பொதுமக்களிடம் வாக்கு சேகரிக்கிறார். அதனைத் தொடர்ந்து கார் மூலம் மதுரை செல்கிறார்.

எடப்பாடி பழனிசாமி சிவகாசிக்கு பிரசாரம் செய்ய வருவதையொட்டி பொதுக்கூட்ட ஏற்பாடுகளை முன்னாள் அமைச்சர் கே.டி.ராஜேந்திர பாலாஜி தலைமையில் அ.தி.மு.க.வினரும் கூட்டணி கட்சி நிர்வாகிகளும் செய்து வருகிறார்கள்.



விழுப்புரம் மாவட்டம் செஞ்சி சட்டமன்றத் தொகுதி.பாரதப் பிரதமர் நரேந்திர மோடி ஆசை பெற்ற ஜனநாயக கூட்டணி வேட்பாளர் அ.கணேஷ்குமார் Ex.MLA செஞ்சி ஒன்றியம் மேல் எடையளம் அஞ்சான் சேரி. கிராமத்தில் தீவிரவாக்கு சேகரிப்பு ஈடுபட்டார் இதில் பாஜக மாவட்ட தலைவர் ராஜேந்திரன்பாஜக நிர்வாகிகள் கணேஷ்குமார் மாம்பழம் சின்னத்தில் வாக்கு சேகரித்தனர்.

# ஐ.பி.எல். கிரிக்கெட்டை நேரில் பார்க்க டிக்கெட்டுகளை பரிசாக வழங்கிய "மின்மினி" செயலி




சென்னை, மார்ச். 28

உலகின் முதல் தமிழ் ஹைப்பர்லோக்கல் சமூக ஊடக செயலியான 'மின்மினி', சென்னை சூப்பர் கிங்ஸ் (சி.எஸ்.கே.) அணியின் அதிகாரப்பூர்வ சோசியல் மீடியா பார்ட்னர் ஆகியுள்ளது. மேலும், ஹேஷ்டேக் மின்மினி சிஎஸ்கே என்கிற போட்டியை கடந்த 19ந்தேதி தொடங்கியது. தற்போது நடந்து வரும் பரபரப்பான ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியை நேரில் பார்க்கும் ஒரு அரிய வாய்ப்பை 'மின்மினி' அதன் பயனாளர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கிறது. அதாவது சென்னை எம்.ஏ.சிதம்பரம் ஸ்டேடியத்தில் சி.எஸ்.கே விளையாடும் போட்டிகளை நேரில் பார்ப்பதற்கான டிக்கெட்டுகளை வழங்குகிறது மின்மினி.

இந்த போட்டியில் கலந்துகொள்வதற்கு எளிதான சில விதிமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும். அதன்படி மின்மினி செயலியின் பயனர்கள் சி.எஸ்.கே அணி மீது தங்களுக்கு இருக்கும் ஆர்வத்தையும், விருப்பத்தையும் வெளிப்படுத்தும் விதத்தில் மின்மினி செயலியில் வீடியோ பதிவிட வேண்டும். ஒவ்வொரு வீடியோவும் குறைந்தது 30 நொடிகள் இருக்க வேண்டும், "#minminiCSK" என இந்த ஹேஷ்டேக் இடுவது கட்டாயம்.

இதில் வெற்றி பெறுபவர்களுக்கு சி.எஸ்.கே. ஆட்டங்களை நேரில் பார்ப்பதற்குதலாஇரண்டு டிக்கெட்டுகள் வழங்கப்படும். அத்துடன் போட்டியை ஸ்டேடியத்தில் பார்த்துக்கொண்டிருக்கும்போது வெற்றியாளர்கள் எடுக்கும் வீடியோ மற்றும் போட்டோ என அனைத்தையும் மின்மினியின் இன்ஸ்டாகிராம் பக்கத்துடன் இணைந்து பகிர்ந்துகொள்ளும் வாய்ப்பும் வழங்கப்படும்.

கடந்த 22ந்தேதி சி.எஸ்.கே. களமிறங்கிய முதல் போட்டியைக் காண மின்மினி நடத்தும் #MinMiniCSK மூலம் 54 வெற்றியாளர்கள் தேர்வு செய்யப்பட்டு அவர்கள் ஐ.பி.எல் போட்டியின் கோலாகலமான தொடக்க நிகழ்ச்சியையும் சி.எஸ்.கே அணியின் அட்டகாசமான முதல் ஆட்டத்தையும் நேரில் காணும் வாய்ப்பை பெற்றனர். மேலும் சென்னை குஜராத் அணிகள் நேற்று மோதிய ஆட்டத்தை பார்க்கவும் 54 டிக்கெட்களை வெற்றியாளர்களுக்கு வழங்கியது மின்மினி.

மின்மினி மூலம் போட்டியை நேரில் கண்டுகளிக்கும் அதிர்ஷ்டத்தை பெற்ற சேலத்தை சேர்ந்த ஹேமநாதன் என்ற பயனாளர் கூறுகையில், 'கிரிக்கெட்டின் தீவிர ரசிகனான எனக்கு இப்போது தான் முதல்முறையாக போட்டியை நேரில் பார்க்கும் வாய்ப்பு கிடைத்துள்ளது. டோனியை களத்தில் பார்க்க வேண்டும் என்ற எனது நீண்ட நாள் கனவு நிறைவேறியது. இந்த வாய்ப்பை வழங்கிய மின்மினிக்கு நன்றி' என்று குறிப்பிட்டார்.

இந்த போட்டியின் வெற்றியாளர்கள் சி.எஸ்.கே ஆட்டம் நடக்கும் நாளிற்கு ஒரு நாள் முன்னதாக அறிவிக்கப்படுவார்கள், மின்மினி நடுவர்குழு வெளிப்படையான நடைமுறை மூலம் வெற்றியாளர்களை இறுதி செய்யும். மின்மினி சிஎஸ்கே என்ற இந்த போட்டி ஐ.பி.எல் லீக் ஆட்டங்கள் முடியும் வரை நடைபெறும். எனவே மின்மினியின் பயனர்கள் மற்றும் சி.எஸ்.கே ரசிகர்கள்தங்களது படைப்புத்திறன் மற்றும் தங்களது அணி மீதான அன்பை வெளிப்படுத்தும் விதமாக வீடியோக்களை பதிவிட்டு போட்டியில் வென்று சி.எஸ்.கே ஆட்டங்களை நேரில் காணும் வாய்ப்பை பெறலாம்.

மின்மினி செயலியை ஆப் ஸ்டோர் மற்றும் பிளே ஸ்டோரில் இருந்து பதிவிறக்கம் செய்யுங்கள். பல புதுமையான வழிகளில் எங்களது பயனர்களுக்கு ஆச்சரியமான அனுபவத்தை கொடுக்க முயற்சி செய்து வருகிறோம் என்று மின்மினி செயலியின் செயல் துணைத் தலைவர் ஸ்ரீராம் தெரிவித்தார்.

# விழுப்புரம் மாவட்டம் செஞ்சி அடுத்த சிங்க வரத்தில் பாமக வேட்பாளர் கணேஷ்குமார் வாக்கு சேகரிப்பு



செஞ்சி மார்ச் 28

ஆரணி தொகுதியில் பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில் பாமக சார்பில் போட்டியிடும் கணேஷ்குமார் ஆரணி தொகுதிக்கு உட்பட்ட செய்தி ஒன்றியம் சிங்கவரம் ஊராட்சியில்கட்சிநிர்வாகிகளுடன் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார் அதன்படி விழுப்புரம் வடக்கு மாவட்ட பாமக செயலாளர் மலையாளம் எம் எல் ஏ சிவக்குமார்தலைமையில் செஞ்சி சிங்கவரம் விநாயகர் கோவில் இருந்து பிரச்சாரத்தை தொடங்கி பொது மக்களிடம் துண்டு பிரசுரங்களை வழங்கி வாக்கு சேகரித்தார் இதில் மாநில செயற்குழு உறுப்பினர் ராஜேந்திரன் பாஜக முன்னாள் மாவட்ட செயலாளர் ராஜேந்திரன்.பாமக முன்னாள் மாவட்ட செயலாளர் ஜே பி முருகன் கனல் பெருமாள் கவரை ஊராட்சி மன்ற தலைவர் அய்யனார் செஞ்சி கிழக்கு ஒன்றிய செயலாளர் ஆப்செட் முருகன் நகர செயலாளர் சின்னத்தம்பி ஒன்றிய கவுன்சிலர் கோபால் பொறியாளர் அணி அ.ம.மு.க எவன்ஸ்.மேல் எடையாலம் ஊராட்சி மன்ற தலைவர் செல்வமணி.பாஜக நிர்வாகிகள் செஞ்சி ஒன்றிய தலைவர் தங்கரா மு நிர்வாகிகள் சரவணன் அமல்ராஜ் வெங்கடேசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு சிங்கவரம் ஊராட்சியில் தங்கள் ஜெயகொண்டான் பொன்பத்தி ஜம்போதி அஞ்சான் சேரி ஆகிய கிராமங்களில் வாக்கு சேகரித்தனர்




நாடாளுமன்ற தேர்ஹல் 2024ஐ முன்னிட்டு 100 சதவீத வாக்களிப்பை வலியுறுத்தி மதுரை மாவட்டம் எம்.ஜி.ஆர். பேருந்து நிலையம் அருகில் உள்ள வணிக வளாகத்தில் மாநகர காவல் ஆணையாளர் லோகநாதன் கூடுதல் கலெக்டர் ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர் மோனிகா ராணா ஆகியோர் தலைமையில் பொதுமக்கள் கவரும் வகையில் கல்லூரி மாணவ, மானவிகள் பங்கேற்ற வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. வருவாய் கோட்டாட்சியர், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் ஷாலினி ஆகியோர் உடன் உள்ளனர்.

# செயின்ட் மதர் தெரசா பொறியியல் கல்லூரியில் சமூக நீதி விழிப்புணர்வு கருத்தரங்கு

நெல்லை, மார்ச். 28

தூத்துக்குடி வாகைக்குளம் செயின்ட் மதர் தெரசா பொறியியல் கல்லூரியில் சமூக நீதி குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கு நடைபெற்றது.

கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற நிகழ்வில் கல்லூரி முதல்வர் ஜாஸ்பர் ஞானச்சந்திரன் வரவேற்புரையாற்றினார். சிறப்பு விருந்தினராக காவல்துறை துணை கண்காணிப்பாளர் ராஜ துறை, துணை ஆய்வாளர்கள் சிவராம், அண்ணாதுரை, முத்துமாரி மற்றும் காமராஜ் கல்லூரி பேராசிரியர் முனைவர் தேவராஜ் பங்கேற்று, சமூகத்தில் நிலவும் குற்றங்கள் மற்றும் அதற்கான சட்டப்பூரவமான தீர்வு குறித்து விழிப்புணர்வு கருத்துக்களை எடுத்துரைத்தார்கள். இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை இயக்குனர் ஜார்ஜ் கிளிங்டன் மற்றும் நிர்வாக மேலாளர் விக்னேஷ் செய்திருந்தார்.






சிவகங்கை மாவட்டம் பாராளுமன்ற பொதுத்தேர்தல் 2024 ஐ முன்னிட்டு 100 சதவீதம் வாக்குப்பதிவு என்ற இலக்கினை நோக்கி பொதுமக்களிடையே வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்திடும் பொருட்டு மகளிர் சுய உதவிக்குழுக்களின் சார்பில் சிவகங்கை அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற விழிப்புணர்வு கோலப்போட்டியினை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் சிவராமன் பார்வையிட்டார். உடன் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் கவிதப்பிரியா, மாவட்ட வழங்கல் அலுவலர் சபீதாள் பேகம் உள்பட பலர் உள்ளனர்.

# தென்காசி மாவட்டத்தில் கலெக்டர் அலுவலகத்தில் செயல்படும் ஊடக சான்றளிப்பு மற்றும் கண்காணிப்பு குழுவிடம் அனுமதி பெற வேண்டும்: கலெக்டர் அறிவிப்பு

தென்காசி, மார்ச். 28

வருகின்ற ஏப்ரல் 19.4.2024 அன்று பாராளுமன்ற தேர்தல் நடைபெற உள்ளதை முன்னிட்டு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள், தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள், தனிநபர் மற்றும் நிறுவனங்கள் தேர்தல் தொடர்பாக விளம்பரங்களை தொலைக்காட்சி, உள்ளூர் தொலைக்காட்சி, எப்.எம். அலைவரிசைகள், பொது இடங்களில் ஒளிஒலி திரைகள் அமைத்தல், குறுஞ்செய்திகள், செய்தித்தாள்கள், மின்னணு செய்தித்தாள்கள்,

சமூக ஊடகக் கணக்குகள், ஒலிப்பதிவுகள் மற்றும் இணையதளங்களில் வெளியிடும் முன் மாவட்ட ஆட்சியரகத்தில் செயல்படும் ஊடக சான்றளிப்பு மற்றும் கண்காணிப்பு குழுவிடம் அனுமதி பெற வேண்டும்.

மக்கள் பிரதிநிதித்துவம் சட்டம் 1957 பிரிவு 127 இன்படி தேர்தல் தொடர்பாக சுவரொட்டிகள், துண்டுப்பிரசுரம் மற்றும் தேர்தல் தொடர்பான விளம்பரங்களை அச்சக உரிமையாளர்கள் அச்சிட்டு பிரச்சாரம் செய்யும்போது அதன் முன்பக்கத்தில் அச்சக உரிமையாளரின் பெயர் மற்றும் முகவரி மற்றும் பதிப்பகத்தார் பெயர் மற்றும் முகவதி மற்றும் எண்ணிக்கை ஆகியவற்றினை படிக்கும் வகையில் தெளிவாக அச்சடிக்கப்பட வேண்டும் என மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் / மாவட்ட கலெக்டர் ஏ.கே.கமல் கிஷோர் தெரிவித்துள்ளார்.

# விருதுநகரில் 100 சதவீதம் வாக்களிப்பதை வலியுறுத்தி நடைபெற்ற வாக்காளர் விழிப்புணர்வு பேரணி

விருதுநகர், மார்ச். 28

விருதுநகர் பழைய பேருந்து நிலையத்தில் மக்களவைத் தேர்தல் 2024 யை முன்னிட்டு வாக்காளர் அனைவரும் 100 சதவீதம் வாக்களிப்பதை வலியுறுத்தி தேர்தல் திருவிழா தேசத்தின் பெருவிழா என்ற தலைப்பில் அரசு அலுவலர்கள், துய்மைக் காவலர்கள், பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்ற வாக்காளர் விழிப்புணர்வு பேரணியை மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட கலெக்டர் வீ.ப.ஜெயசீலன் தொடங்கி வைத்து, வாக்காளர் விழிப்புணர்வு துண்டுப்பிரசுரங்களை பொதுமக்களுக்கு வழங்கினார்.




மக்களவைத் தேர்தல் 2024 நடைபெறயுள்ளதையொட்டி வாக்காளர்களிடையே 100 சதவிகிதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்தும், பணம் மற்றும் பரிசுப்பொருட்கள் பெறாமல் நியாயமான முறையில் வாக்களிப்பதை வலியுறுத்தியும் நாள்தோறும் பல்வேறு தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதன்படி, விருதுநகர் பழைய பேருந்து நிலையத்தில் வாக்காளர்களிடையே 100 சதவிகிதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்தும், பணம் மற்றும் பரிசுப்பொருட்கள் பெறாமல் நியாயமான முறையில் வாக்களிப்பதை வலியுறுத்தியும் நடைபெற்ற விழிப்புணர்வு பேரணியை மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட கலெக்டர் வீ.ப.ஜெயசீலன் தொடங்கி வைத்தார்.

பின்னர், அங்கிருந்த பயணிகள் மற்றும் பொதுமக்களுக்கு வாக்காளர் விழிப்புணர்வு தொடர்பான துண்டுப்பிரசுரங்களை வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

இந்த பேரணியில் சுமார் 200க்கும் மேற்பட்ட ஆண், பெண் வாக்காளர்கள், அரசு அலுவலர்கள், பணியாளர்கள் கலந்து கொண்டு வாக்களிப்பதன் அவசியம் குறித்து, வாக்களிப்பது நமது உரிமை, கையூட்டு பெறாமல் வாக்களிக்க வேண்டும். நம்மை ஆள்பவரை நாமே தீர்மானிக்க வேண்டும். ஜனநாயக கடமையை நாம் ஆற்ற வேண்டும் என்ற வாக்காளர் விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாதைகளை ஏந்தி சென்று, விழிப்புணர்வு கோஷங்களை எழுப்பியும், விழிப்புணர்வு துண்டுப்பிரசுரங்களையும் பொதுமக்களுக்கு வழங்கியும், விருதுநகர் பேருந்து நிலையத்திலிருந்து நகரின் முக்கிய வீதிகள் வழியாக நகராட்சி அலுவலகம் வரை சென்று பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர். வாக்காளர்கள் அனைவரும் 100 சதவிகிதம் தவறாமல் வாக்களித்து ஜனநாயக கடமையை ஆற்ற வேண்டும் என்றும், நேர்மையான, நியாயமான, வெளிப்படை தன்மையுடன் தேர்தல் நடைபெறுவதற்கு பொதுமக்கள் அனைவரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும் என மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட கலெக்டர் கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்ச்சியில், தனித்துணை ஆட்சியர் (முத்திரை) பிரேம்குமார், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் கார்த்திகேயினி, விருதுநகர் நகராட்சி ஆணையாளர், வட்டாட்சியர், உட்பட அரசு அலுவலர்கள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

# பாலமேடு ஸ்ரீ பத்ரகாளியம்மன் ஸ்ரீ மாரியம்மன் கோவில் 33-வது ஆண்டு உற்சவ விழா

அலங்காநல்லூர், மார்ச். 28

மதுரை மாவட்டம் பாலமேடு ஸ்ரீ பத்ரகாளியம்மன் ஸ்ரீ மாரியம்மன் கோவில் 33வது ஆண்டு உற்சவ விழாவினை முன்னிட்டு பக்தர் விஜயகுமார் தனது வீட்டில் அமைந்துள்ள கருப்பசாமிக்கு பொங்கல் வைத்து மாலை அணிவித்து தேங்காய் பழம் உள்ளிட்டவைகள் படைத்து சிறப்பு பூஜைகள் செய்து அருள் இறங்கி அக்கினி சட்டி எடுத்தார். பின்னர் பேருந்து நிலையம் அருகே உள்ள விநாயகர் கோவிலுக்கு சென்று அங்கும் சிறப்பு பூஜைகள் செய்து வழிபட்டார். அதனை தொடர்ந்து ஊர்வலமாகச் சென்று ஸ்ரீ பத்திரகாளியம்மன் கோவில் ஸ்ரீ மாரியம்மன் கோவிலுக்கு சென்று தனது நேர்த்தி கடனை நிறைவேற்றினார். இதில் பக்தர்கள் மற்றும் குடும்பத்தினர் கலந்து கொண்டனர். தனது வீட்டில் அன்னதானமும் வழங்கினார்...



# கலசலிங்கம்பல் கலையில் செயற்கை நுண்ணறிவு பயிற்சி

ஸ்ரீவில்லிபுத்தூர், மார்ச்.28

ஸ்ரீ வில்லிபுத்தூர், கலசலிங்கம் பல்கலை, இசிஇ துறை சார்பில், இந்திய ஏரோநாட்டிக்கல் சொசைட்டி, இஸ்ரோ ப்ராபல்ஷன் ,மகேந்திரகிரி ஆகியவற்றுடன் இணைந்து, விண்வெளி பயன்பாடு செயற்கை நுண்ணறிவு ஒரு நாள் பயிலரங்கம், வேந்தர் முனைவர் கே.ஸ்ரீதரன் தலைமையில் நடைபெற்றது.

ஐபிஆர்சி, விஞ்ஞானிகள் ஆர்.காளிமுத்து, தலைவர் டி.ரமேஷ், துணை இயக்குநர் சி.சந்திர சேகரன் ஆகியோர் சிறப்புரையாற்றினர் டீன் சிவகுமார் வரவேற்றார். துறை தலைவர் ஏ.முத்துக்குமார், வாழ்த்துரை வழங்கினார். பேராசிரியர் ஜே.சார்லஸ் பிரவின் பயிற்சி விளக்கமளித்தார். . பெங்களூர் யூ ஆர் எஸ் சி விஞ்ஞானி ஜே.டாபினி மனோஜா மற்றும் இஸ்ரோ விஞ்ஞானி பி.கணேஷ், ஆகியோர் சந்திரயான் 3 திட்டத்தில் செயற்கை நுண்ணறிவு பயன்பாடு பற்றியும், "மேட்லேப்" பயிற்சிகளையும் வழங்கினர்.

இஸ்ரோ விஞ்ஞானிகள் பதினைந்து பேர் பங்கேற்று, பல்கலை பேராசிரியர்களுடன் கலந்துரையாடினர். துணை வேந்தர் எஸ்.நாராயணன், பதிவாளர் வி.வாசுதேவன் ஆராய்ச்சி துறை இயக்குனர் எம்.பள்ளிகொண்ட ராஜசேகரன் வாழ்த்துரை வழங்கினர். பல்வேறு கல்லூரி களிலுருந்து,160 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டுபயனடைந்தனர். ஐபிஆர்சி விஞ்ஞானி வேல்முருகன் நன்றி கூறினார்.



# ஆலங்குளத்தில் எச்ஐவி எய்ட்ஸ் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி

கம்பம், மார்ச். 28

மதுரை மாவட்டம் ஆலங்குளத்தில் சில்ட்ரன் சாரிடபிள் டிரஸ்ட் திட்டமான ஹெல்த் கேர் ரிசெர்ச் குரூப் ன் எச்ஐவி எய்ட்ஸ் குறித்த விழிப்புணர்வு பொதுமக்கள் மற்றும் கர்ப்பிணி பெண்களுக்கு நடத்தப்பட்டது. இதில் சில்ட்ரன் சாரிட்டபிள் டிரஸ்ட் மதுரை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் மீனாட்சி சுந்தரம் வரவேற்புரை வழங்கினார். அங்கன்வாடி ஆசிரியை திலகவதி தலைமை வகித்தார். இந்நிகழ்ச்சியின் முக்கிய அம்சமாக நோய் பாதிப்புக்கு உள்ளானவர்களை சரிசமமாக நடத்த வேண்டும் மேலும் கர்ப்பிணி பெண்களும் உரிய பரிசோதனைகள் செய்யது கொள்ள வேண்டும் ஆரம்ப கட்டத்தில் நோய்க்கான அறிகுறிகள் காணப்பட்டால் அது குழந்தைக்கு பாதிக்காமல் காப்பாற்ற இயலும் என்று அறிவுறுத்தப்பட்டது. நிகழ்ச்சியின் இறுதியாக விஜி நன்றியுரை வழங்கினார்.




# ஆண்டிபட்டி அருகே மலைவாழ் மக்களுக்கு வாக்காளர் விழிப்புணர்வு முகாம்

ஆண்டிபட்டி, மார்ச்.28

தேனி மாவட்டம் ஆண்டிபட்டி அருகே உள்ள ராஜக்காள்பட்டி ஊராட்சி கதிர்வேல்புரம் மலைவாழ் மக்களுக்கு வாக்களிப்பதின் அவசியம் குறித்து விழிப்புணர்வு முகாம் நடத்தப்பட்டது.

வருகின்ற 19ஆம் தேதி பாராளுமன்றத்திற்கான தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட நிலையில் ,தேனி பாராளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட ஆண்டிபட்டி ஒன்றியத்தில் உள்ள ராஜக்காள்பட்டி உட்கடை கதிர்வேல் புரத்தில் உள்ள மலைவாழ் மக்களுக்கு வாக்காளர் விழிப்புணர்வு முகாம் நடத்த மாவட்ட ஆட்சித் தலைவர் சசீவனா அவர்கள் அறிவுறுத்தலின்படி, விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.

முகாமிற்கு ஆண்டிபட்டி ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் ஐயப்பன் தலைமை தாங்கினார். ஊராட்சி மன்ற தலைவர் ஜெகதா ஜெயக்குமார் முன்னிலை வகித்தார். மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் வாணி, ஊராட்சி செயலர் பால்பாண்டி, திலகவதி உள்பட பலர் கலந்து கொண்டனர். மலைவாழ் மக்கள் எவ்வாறு வாக்களிக்க வேண்டும், 100% வாக்கு செலுத்த வேண்டும் என்பது குறித்து விளக்கி கூறப்பட்டது.



# இராமநாதபுரம் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் பாராளுமன்ற தேர்தலுக்கான தேர்தல் கட்டுப்பாட்டு மற்றும் ஊடக கண்காணிப்பு அறையினை கலெக்டர் ஆய்வு

இராமநாதபுரம், மார்ச். 28

இராமநாதபுரம் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் பாராளுமன்ற தேர்தலுக்கான தேர்தல் கட்டுப்பாட்டு அறை மற்றும் ஊடக கண்காணிப்பு அறை ஆகியவற்றை மாவட்ட கலெக்டர் பா.விஷ்ணு சந்திரன் முன்னிலையில் இராமநாதபுரம் பாராளுமன்ற தொகுதிக்கான தேர்தல் பொது பார்வையாளர் பண்டாரி யாதவ், பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது இராமநாதபுரம் பாராளுமன்ற தொகுதிக்கான தேர்தல் பொதுபார்வையாளர், தேர்தல் கட்டுப்பாட்டு அறையில் மின்னணு மூலம் தேர்தல் பறக்கும்படை மற்றும் கண்காணிப்பு குழு செயல்பட்டு வருவதை பார்வையிட்டார். அதனைத்தொடர்ந்து தேர்தல் தொடர்பாக பொதுமக்களிடமிருந்து வரக்கூடிய புகார்கள் குறித்த பதிவேடுகளை பார்வையிட்டார்.

பின்னர் ஊடக கண்காணிப்பு அறைக்குச் சென்று தொலைக்காட்சிகள் மற்றும் உள்;ர் தொலைக்காட்சிகளில் வெளிவரும் அரசியல் கட்சி விளம்பரங்கள் மற்றும் சுயேட்சை வேட்பாளர்கள் வெளியிடும் விளம்பரங்கள் குறித்து கண்காணித்து பதிவிடும் பதிவேடுகளை பார்வையிட்டதுடன், ரேடியோ, பேஸ்புக் மற்றும் டிவிட்டர் ஆகியவற்றில் வேட்பாளர்கள் வாக்கு சேகரிப்பதன் விபரம் தொடர்பான பதிவுகளை கண்காணிக்க வேண்டுமென அலுவலர்களிடம் பண்டாரி யாதவ், அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வில் மாவட்ட வருவாய் அலுவலர் இரா.கோவிந்தராஜலு மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.



## மஜா வெட்டிங் வீடியோ பாடல் வெளியீடு




நிகேஷ் இயக்கத்தில் ஜி.வி பிரகாஷ் நடிப்பில் வெளிவந்த ரெபெல் திரைப்படம் திரையரங்குகளில் வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கிறது.

இந்நிலையில்ஜி.வி.பிரகாஷ்அடுத்ததாகநடித்திருக்கும் படம் "டியர்". "செத்தும் ஆயிரம் பொன்" படத்தை இயக்கிய ஆனந்த் ரவிசந்திரன் இந்த படத்தை இயக்கி இருக்கிறார். ஐஷ்வர்யா ராஜேஷ் இந்த படத்தில் கதாநாயகியாக நடித்துள்ளார்.

ஜி.வி.பிரகாஷ் மற்றும் ஐஷ்வர்யா ராஜேஷ் இணைந்து நடிக்கும் முதல் படம் இது. ஜி.வி.பிரகாஷ் இந்த படத்திற்கு இசையமைத்துள்ளார்.

இப்படத்தின் பாடலான 'மஜா வெட்டிங்' என்ற பாட்டின் வீடியோ வெளியாகியுள்ளது. இதில் ஜி.வி பிரகாஷ் மற்றும் ஐஷ்வர்யா ராஜேஷ் இருவருக்கும் கல்யாணம் நடைப்பெறும் காட்சிகள் அமைந்துள்ளது. பாடல் கல்யாண சீசனுக்கு ஏற்ப மிகவும் உற்சாகத்துடனும், கொண்டாடத்துடன் அமைந்துள்ளது.

"டியர்" படம் வரும் ஏப்ரல் மாதம் 11 ஆம் தேதி வெளியாகவுள்ளது.

## சிவகார்த்திகேயனுக்கு நடனம் கற்று தந்த ஸ்ரீலீலா



தெலுங்கு திரை உலகில் முன்னணி நடிகையாக இருப்பவர் ஸ்ரீலீலா. சமீப காலமாக ஏராளமான படங்கள் பல முன்னணி பிரபலங்களுடன் நடித்து வருகிறார். மகேஷ்பாபுவுடன் ஸ்ரீலீலா இணைந்து நடித்த குண்டூர் காரம் என்ற படம் 2 மாதங்களுக்கு முன்பு திரைக்கு வந்து வெற்றியை பெற்றது.

படத்தில் மகேஷ்பாபுவுடன் 'குர்ச்சி மடத்த பெட்டி' என்ற பாடலுக்கு ஸ்ரீலீலா ஆடிய நடனம் ரசிகர்களை கவர்ந்தது.

இந்நிலையில் சில தினங்களுக்கு முன்பு சிவகார்த்திகேயன், ஸ்ரீலீலா மற்றும் சதீஷ் ஆகியோர் தனியார் கல்லூரியின் கல்சுரல்ஸ் நிகழ்ச்சியில் கலந்துக் கொண்டனர். அடுத்ததாக ஸ்ரீ லீலா, சிவகார்த்திகேயன் இணைந்து படத்தில் நடித்து வருகின்றனர்.

அவர்கள் இருவரையும் நோக்கி ரசிகர்கள் குர்ச்சி மடத்த பெட்டி பாடலுக்கு இணைந்து நடனம் ஆடும்படி கேட்டுக்கொண்டனர்.

இதையொட்டி அந்த பாடலுக்கு சில நிமிடங்கள் இணைந்து நடனம் ஆடினர். அப்போது ஸ்ரீ லீலா, சிவகார்த்திகேயனுக்கு நடன ஸ்டெப்களை கற்றுக் கொடுத்தார். கல்லூரி மாணவர்களின் வேண்டுதலுக்கு இணங்க மாணவர்களுக்காக கல்லூரி முதல்வரிடம் விடுமுறை கேட்டார். கல்லூரி மாணவர்களின் அந்த வீடியோ சமூக வலைதளத்தில் வைரலாக பரவி வருகிறது.

## நயன்தாரா :2 குழந்தைகளை பிரிந்த ஏக்கத்தில் விக்னேஷ் சிவன்

பிரபல இயக்குனர் விக்னேஷ் சிவன் 'லவ் இன்சூரன்ஸ் கார்ப்பரேஷன்' என்ற புதிய படத்தை இயக்கி வருகிறார். இது காதல், நகைச்சுவை திரைப்படமாகும். இப்படத்தில் கதாநாயகனாக பிரதீப் ரங்கநாதன்,கீர்த்தி ஷெட்டி, எஸ். ஜே.சூர்யா, யோகி பாபு உள்ளிட்ட பலர் நடித்து உள்ளனர்.

இப்படத்தை 'செவன்ஸ்கிரீன்ஸ்டுடியோ' மற்றும் ரவுடி பிக்சர்ஸ் சார்பில் எஸ்.எஸ்.லலித் குமார் மற்றும் விக்னேஷ் இணைந்து தயாரித்துள்ளனர்.இந்த படத்தின் படப்பிடிப்புகள் கடந்த சில வாரங்களாக மலேசியா மற்றும் சிங்கப்பூரில் நடந்து வருகிறது.

இந்நிலையில் நயன்தாரா 2 மகன்களை கையில் வைத்திருக்கும் புகைப்படங்களையும், நயன்தாரா அவர்களுடன் விளையாடும் புகைப்படங்களையும் தனது அதிகாரப்பூர்வ இன்ஸ்டாகிராம் பதிவில் விக்னேஷ் பகிர்ந்துள்ளார்.

"படப்பிடிப்பு பணிகள் காரணமாக வாரக்கணக்கில் குடும்பத்தினரிடம் இருந்து பிரிந்து இருக்கிறேன்"தனது குடும்பத்தினருடன் நேரத்தை செலவிடுவதை தவறவிட்டேன். விரைவில் தனது அன்பு குழந்தைகள், மனைவி நயன்தாராவை அரவணைக்க காத்திருக்கிறேன்"

என குடும்பத்தை பிரிந்த ஏக்கத்தில் அவ்வாறு விக்னேஷ் பதிவிட்டு உள்ளார்.

நயன்தாரா அடுத்ததாக 'டெஸ்ட்' மற்றும் 'மண்ணாங்கட்டி சின்ஸ் 1960' ஆகிய படங்களில் நடிக்கிறார்.அவை தயாரிப்பின் வெவ்வேறு கட்டங்களில் உள்ளன. அவர் கடைசியாக 'அன்னபூரணி' படத்தில் நடித்தார்.

## ஹோலி கொண்டாடிய திரை உலக பிரபலங்கள்



ஹோலி பண்டிகை நாடு முழுவதும் நேற்று கொண்டாடப் பட்டது. இதையொட்டி இந்திய திரை பிரபலங்கள் பலர் ஒருவருக் கொருவர் ஹோலி பண்டிகையை உற்சாகமாக கொண்டாடி மகிழ்ந்தனர்.

நடிகர் ரஜினிகாந்த் சென்னை போயஸ்கார்டனில் உள்ள அவரது இல்லத்தில் மனைவி லதா, மகள்கள் ஐஸ்வர்யா, சவுந்தர்யா மற்றும் பேரன்களுடன் 'ஹோலி' கொண்டாடினார்.


ரஜினி முகத்தில் அவரது பேரன்கள் மகிழ்ச்சியாக கலர் பொடிகளை பூசினர். பதிலுக்கு ரஜினியும் பேரன்கள் முகத்தில் வர்ணங்களை பூசி மகிழ்ந்தார்.

இதுபோன்று நடிகைகள் ராஷ்மிகா மந்தனா, மிருணாள் தாக்கூர், ராய்லட்சுமி, கியாரா அத்வானி, ரித்திகாசிங், நிமிஷா சஜயன், திஷா பதானி, ரவீனா தாண்டன், அவரது மகள் ராஷா உள்பட பலர் ஹோலி பண்டிகையை கொண்டாடி புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களை சமூக வலைதள பக்கங்களில் வெளியிட்டுள்ளனர்.

பிரியங்கா சோப்ரா கணவர் நிக் ஜோனாஸ் மகள் மால்டி மேரியுடன் இணைந்து ஹோலி கொண்டாடி மகிழ்ந்தார். இந்த பண்டிகையை கொண்டாட பிரியங்கா சோப்ரா கணவரும், ஹாலிவுட் பாடகருமான நிக்ஜோனாஸ் வெளிநாட்டில் இருந்து சில நாட்களுக்கு முன்பே மும்பை வந்திருந்தார்.

நடிகர் ராம்சரண் இயக்குனர் சுகுமாரனுடன் சேர்ந்து ஹோலி கொண்டாடியுள்ளார். இதுபோன்று அமிதாப் பச்சன், சிரஞ்சீவி, சித்தார்த் மல்கோத்ரா, அக்ஷய்குமார், டைகர் ஷெராப், விஜய் தேவரகொண்டா உள்பட பலர் ஹோலி பண்டிகையை மிகவும் மகிழ்ச்சியாக கொண்டாடி உள்ளனர்.

## இயக்குனர்களின் பாராட்டு மழையில் ஆடுஜீவிதம்




பிலெஸ்ஸி இயக்கத்தில் பிரித்விராஜ் சுகுமாரன், அமலாபால், சோபா மேனன் போன்ற முன்னணி நடிகர்கள் நடித்து, வரும் மார்ச்28 ஆம் தேதி வெளியாகவுள்ளதிரைப்படம் 'ஆடுஜீவிதம்'.

2008 ஆம் ஆண்டு வெளிவந்த ஆடுஜீவிதம் நாவலைத் தழுவி இப்படத்தை இயக்கப்பட்டுள்ளது. ஏ.ஆர் ரஹ்மான் இப்படத்திற்கு இசையமைத்து இருக்கிறார். ரசூல் பூக்குட்டி ஒலி வடிவமைத்துள்ளார்.

2018 ஆம் ஆண்டு படபிடிப்பை தொடங்கிய ஆடு ஜீவிதம் படக்குழுவினர், 2023 ஆம் ஆண்டில் படபிடிப்பு பணிகளை முடித்தனர். மலையாள சினிமாவில் ஆடுஜீவிதம் படமே மிக நீண்ட நாட்கள் படப்பிடிப்பு நடந்த படமாகும்.

கடந்த சில வாரங்களாகவே பிரித்விராஜ், படத்தின் ப்ரோமோஷன் பணியில் ஈடுபட்டு வருகிறார். இந்நிலையில் பிரித்விராஜ் நேற்று தெலுங்கு திரைத்துறையின் முன்னணி இயக்குனர்களை ஆடுஜீவிதம் படத்தின் சிறப்பு காட்சிக்கு அழைத்து இருந்தார். மைத்திரி மூவி மேக்கர்ஸ் நிறுவனம் ஆடுஜீவிதம் படத்தை தெலுங்கு மொழியில் விநியோக உரிமையைப் பெற்றது.

சிறப்பு காட்சியைப் பார்த்த தெலுங்கு திரைத்துறை இயக்குனர்கள் மிகவும் பாராட்டியுள்ளனர். ஆடுஜீவிதம் படத்தின் "ஓமானே" பாடலின் லிரிக் வீடியோ நேற்று வெளியானது.

மஞ்சும்மல் பாய்ஸ் மற்றும் பிரேமலு படத்திற்கு பிறகு வெளியாகும் மலையாளப் படம் இதுவே. அதனால் மக்களிடம் பெரும் எதிர்பார்ப்பு இப்படத்தின் மேல் உருவாகியுள்ளது.

## தென் ஆப்பிரிக்க ஒப்பந்தத்தில் இருந்து டி காக் ஆண்ட்ரிச் நோர்ட்ஜே விடுவிப்பு




தென் ஆப்பிரிக்க கிரிக்கெட் வாரியம் தங்கள் அணியின் வீரர் வீராங்கனைகளுக்கான 202425 ஆம் ஆண்டிற்கான ஒப்பந்த பட்டியலை இன்று வெளியிட்டுள்ளது. இந்த பட்டியலில் ஒருநாள் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வை அறிவித்த நட்சத்திர வீரர் குயின்டன் டி காக் பெயர் இடம்பெறவில்லை. முன்னதாக டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்தும் ஓய்வை அறிவித்த அவர் தற்போது டி20 கிரிக்கெட்டில் மட்டுமே விளையாடி வருகிறார்.

மேலும் காயம் காரணமாக கடந்த ஓராண்டாக விளையாடமல் இருந்துவரும் வேகப்பந்து வீச்சாள் ஆண்ட்ரிச் நோர்ட்ஜேவுக்கு இந்த ஒப்பந்தத்தில் இடம் கிடைக்கவில்லை. அதேபோல் டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வை அறிவித்துள்ள டீன் எல்கரும் இப்பட்டியலில் இருந்து விலக்கப்பட்டுள்ளார். மேலும் கடந்த ஓராண்டாக தென் ஆப்பிரிக்க கிரிக்கெட் அணிக்காக விளையாடிய சிசாண்டா மகாலா, வெய்ன் பார்னெல், கீகன் பீட்டர்சென் ஆகியோருக்கும் ஒப்பந்தத்தில் இடம் கிடைக்கவில்லை.

மேலும் ஜெரால்ட் கோட்ஸி, நந்த்ரே பர்கர், டோனி டி ஸோர்ஸி ஆகியோர் தென் ஆப்பிரிக்க கிரிக்கெட் வாரிய ஒப்பந்தத்தைப் பெற்றுள்ளார்.

அவர்களுடன் நட்சத்திர வீரர்களான ஐடன் மார்க்ரம், ஹென்ரிச் கிளாசென், டெம்பா பவுமா, டேவிட் மில்லர், லுங்கி இங்கிடி, தப்ரைஸ் ஸம்ஸி, காகிசோ ரபாடா ஆகியோரும் ஒப்பந்த பட்டியலில் தொடர்கின்றனர். தென் ஆப்பிரிக்க மகளிர் அணியை பொறுத்தவரையில் கடந்தாண்டு சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வை அறிவித்த ஷப்னிம் இஸ்மாயில் மட்டும் ஒப்பந்த பட்டியலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்.

## ஐபிஎல் 2024 : சென்னை குஜராத் போட்டியை நேரில் பார்த்து ரசித்த சூரி



ஐபிஎல் தொடரின் இன்றைய 7வது போட்டியில் சென்னை சூப்பர்கிங்ஸ் குஜராத் அணிகள் மோதுகிறது. இதில் டாஸ் வென்ற குஜராத் அணி பந்து வீச்சை தேர்வு செய்தது.

போட்டியில் அதிரடியாக ஆடிய ரச்சின் 46 ரன்கள் விளாசினார். 5 சிக்சர்களை பறக்கவிட்ட துபே அரை சதம் கடந்து 51 ரன்னில் ஆட்டமிழந்தார். இறுதியில் சென்னை அணி 6 விக்கெட்டுகளை இழந்து 206 ரன்கள் குவித்தது.

குஜராத் அணி தரப்பில் ரஷித் கான் 2 விக்கெட்டுகளையும் சாய் கிஷோர், ஜான்சன், மோகித் சர்மா ஆகியோர் தலா 1 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இந்த போட்டியை நடிகர் சூரி நேரில் கண்டு கழித்தார். இது தொடர்பாக தனது எக்ஸ் பக்கத்தில் அவர் பதிவிட்டுள்ளார். அதில், "முதல் முறை சேப்பாக்கம் மைதானத்தில். Fantastic Atmosphere. அற்புதமான ரசிகர்கள். சென்னை என்றாலே தனி கெத்து தான். நம்மாளுங்க மைதானத்தில் பட்டைய கிளப்புறாங்க...தல டோனியை பார்க்க ஆவலுடன் காத்திருக்கிறேன்" என்று சூரி பதிவிட்டுள்ளார்.

## 42வயதில் இப்படி ஒரு கேட்ச்ஆ? அதிர்ந்த சேப்பாக்கம்.. வைரலாகும் எம்.எஸ். டோனி வீடியோ



ஐ.பி.எல். 2024 கிரிக்கெட் தொடரின் (மார்ச் 26) ஆட்டத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ் மற்றும் குஜராத் டைட்டன்ஸ் அணிகள் மோதின. டாஸ் வென்று பந்துவீச்சை தேர்வு செய்த குஜராத் அணி போட்டி முடிவில் 63 ரன்கள் வித்தியாசத்தில் தோல்வியை தழுவியது. இந்த போட்டியில் முதலில் பேட்டிங் செய்த சென்னை அணி 20 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 206 ரன்களை குவித்தது. சென்னை சார்பில் துவக்க வீரர்களான கேப்டன் ருதுராஜ் கெய்க்வாட் மற்றும் ரச்சின் ரவீந்திரா தலா 46 ரன்களை குவித்து நல்ல துவக்கம் கொடுத்தனர். அடுத்து வந்த ரஹானே 12 ரன்களில் பெவிலியன் திரும்பினார். அடுத்து வந்த ஷிவம் தூபே அதிரடியாக ஆடி 23 பந்துகளில் 51 ரன்களை குவித்தார். போட்டி முடிவில் டேரில் மிட்செல் 24 ரன்களுடன் களத்தில் இருந்தார். இந்த நிலையில், 207 ரன்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய குஜராத் அணி சீரான இடைவெளியில் விக்கெட்டுகளை இழந்தது. சேசிங்கில் குஜராத் அணி 55 ரன்களுக்கு 2 விக்கெட்டுகளை இழந்திருந்த நிலையில் மிட்செல் பந்து வீச்சை எதிர்கொண்டார் விஜய் சங்கர். இந்த பந்து அவரது பேட்இல் டிப் ஆகி விக்கெட் கீப்பருக்கு கேட்ச் ஆக மாறியது. கீப்பிங்கில் நின்றிந்த எம்.எஸ். டோனி தன்னை விட பந்து சற்று விலகியே சென்ற போதிலும், அபாரமாக பாய்ந்து கேட்ச் பிடித்தார். இந்த சீசன் துவங்கும் முன்பிருந்தே, எம்.எஸ். டோனி இந்த சீசனுடன் ஓய்வு பெறுவாரோ என்றபேச்சும்,அவரதுஉடல்நிலைகுறித்தசந்தேகமும்நெட்டிசன்கள்மற்றும்ரசிகர்கள்மத்தியில்பெரும்கேள்விக்குறியாக இருந்தது வந்தது. இவற்றுக்கு பதில் அளிக்கும் வகையில், எம்.எஸ். டோனியின் நேற்றைய கேட்ச் அமைந்தது. இது தொடர்பான வீடியோ தற்போது சமூக வலைதளங்களில் வைரல் ஆகி வருகிறது.

## குஜராத்தை 63 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது சிஎஸ்கே



ஐபிஎல் தொடரின் இன்றைய 7வது லீக் போட்டியில் சென்னை குஜராத் அணிகள் மோதியது. இதில் டாஸ் வென்ற குஜராத் பந்து வீச்சை தேர்வு செய்தது. அதன்படி முதலில் ஆடிய சென்னை அணி 20 ஓவர் முடிவில் 6 விக்கெட்டுகளை இழந்து 206 ரன்கள் குவித்தது. அதிகபட்சமாக துபே 51, ரச்சின், ருதுராஜ் ஆகியோர் 46 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தனர்.

இதனையடுத்து 207 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் குஜராத் அணி களமிறங்கியது. தொடக்க வீரரான கில் 8 ரன்னில் ஆட்டமிழந்தார். இதனை தொடர்ந்து இம்பேக்ட் பிளேயராக சாய் சுதர்சன் இறங்கினார். சாஹா மற்றும் சுதர்சன் இருவரும் சிறப்பாக விளையாடி ரன்களை சேர்த்தனர். சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய சாஹாவுக்கு பவுன்சர் பந்தை வீசி தலையில் அடிபட வைத்த தீபக் சாஹர் அடுத்த பந்திலேயே அவரது (21) விக்கெட்டை வீழ்த்தினார். அடுத்து வந்த விஜய் சங்கர் 12, மில்லர் 21 ரன்னில் நடையைக் கட்டினர். பொறுப்புடன் விளையாடிய சாய் சுதர்சன் 37 ரன்னில் அவுட் ஆனார். இதனையடுத்து வந்த வீரர்கள் சொற்ப ரன்னில் வெளியேற 20 ஓவர் முடிவில் குஜராத் அணி 8 விக்கெட்டுகளை இழந்து 143 ரன்கள் எடுத்தது. இதனால் 63 ரன்கள் வித்தியாசத்தில் சென்னை வெற்றி பெற்றது. சென்னை அணி தரப்பில் தீபக் சாஹர், தேஷ்பாண்டே 2 விக்கெட்டுகளை கைப்பற்றினர்.



**கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த**
**ஒன்றுநன் றுள்ளக் கெடும்**

**விளக்கம்:**

**முன் உதவி செய்தவர் பின்பு கொன்றார் போன்ற துன்பத்தைச் செய்தாரானாலும், அவர் முன் செய்த ஒரு நன்மையை நினைத்தாலும் அந்தத் துன்பம் கெடும்.**

நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.